(திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைய டிரான்ஸ்போர்ட் மானியத்தின் மீது நீங்கள் இதுபற்றி விரிவாகப் பேசலாம்.

ஜம்புலிபுத்தூர், கதலிநரசிங்கபெருமாள் கோவில்

*737 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஜம்புலிபுத்தூர், கதலிநரசிங்கபெருமாள் கோவில் பழைய கட்டடத்தை புதிப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆம்.

திரு. நா. வே. குருசாமி: தலைவரவர்களே, இந்த கோயில் ஒரு பழைய கோயில். அதைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தக் கோயில் திருப்பணிகளுக்காக 22—7—1970-ல் ரூ. 40,000 ஒதுக்கப் பட்டது. அறநிலையத் துறை 10,000 ரூபாய் உதவித்தொகை அளிக்க முன்வந்தது. ஆனால் திருப்பணிக் குழு சரியாக இயங்காததால், மீண்டும் புதிதாக ஒரு குழு அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சொ. காவேரி மணியம்: தலைவரவர்களே, இந்த ஜம்புலி புத்தூரில் இருக்கக் கூடிய கோயில் நம்முடைய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா? அதன் ஆண்டு வருமானம் என்ன? அதற்கு தனி டிரட்டிகள் போடப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தக் கோயில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்கு உள்பட்டதுதான். மற்ற விபரங்கள் இப்போது என்னிடம் இல்லை.